**2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டம்**

2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (ஊ) எனும் பந்தியுடன் சேர்த்துவாசிக்கப்படும் அச்சட்டத்தின் 50 ஆம் பிரிவின்கீழ் எரிசக்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

புண்ய ஶ்ரீ குமார ஜெயக்கொடி
எரிசக்தி அமைச்சர்

கொழும்பு,

2025,..............

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள், 2025 ஆம் ஆண்டின் இலங்கை மின்சார (தன்னார்வ இளைப்பாறுகைத் திட்டத்தின் நியதி நிபந்தனைகள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இவ்வொழுங்குவிதிகள், 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (ஊ) எனும் பந்தியின் ஏற்பாடுகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட அடுத்துறும் கம்பெனியொன்றுக்குக் குறித்தளிக்கப்படுவதற்கு விருப்புத் தெரிவிக்காதவர்களாகவும் (இதனகத்துப்பின்னர் "தன்னார்வ இளைப்பாறுகைத் திட்டம் எனக் குறிப்பீடுசெய்யப்படும்) தன்னார்வ இளைப்பாறுகைத் திட்டமொன்றின்கீழ் தன்னார்வ இளைப்பாறுகைக்கு உரித்துடையவர்களாகவுமுள்ள இலங்கை மின்சார சபையின் (இதனகத்துப்பின்னர் "ஊழியர்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஒவ்வோர் அலுவலருக்கும் சேவகருக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

3. இரண்டாம் ஒழுங்குவிதியின்கீழான தன்னார்வ இளைப்பாறுகைக்கு உரித்துடையவராகவுள்ள எவரேனும் ஊழியர் பொருளளவில் இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

4.(1) இலங்கை மின்சார சபையின் நிரந்தர ஊழியர்கோப்பின்கீழ் சேவையாற்றுகின்ற பின்வரும் வகுதிகளைச்சேர்ந்த ஊழியர்களுக்குத் தன்னார்வ இளைப்பாறுகைத் திட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான நட்டஈடு பின்வருமாறாக இருத்தல் வேண்டும்:-

(அ) பத்தாண்டுகள் அல்லது பத்தாண்டுகளுக்கு மேலான சேவைக்காலத்தைக் கொண்டுள்ள ஊழியர்களுக்கு –

(i) கடந்தகால சேவைக்காக ஒவ்வொரு பன்னிரெண்டு மாதங்களுக்கும் 2.0 மாதங்களுக்கான சம்பளம்; அத்துடன்

(ii) முன்னோக்கி எஞ்சியுள்ள சேவைக்காக ஒவ்வொரு பன்னிரெண்டு மாதங்களுக்கும் 1.5 மாதங்களுக்கான சம்பளம்;

(ஆ) பத்தாண்டுகளுக்குக் குறைவான சேவைக்காலத்தைக் கொண்டுள்ள ஊழியர்களுக்கு -

(i) கடந்தகால சேவைக்காக ஒவ்வொரு பன்னிரெண்டு மாதங்களுக்கும் 5.0 மாதங்களுக்கான சம்பளம்; அத்துடன்

(ii) முன்னோக்கி எஞ்சியுள்ள சேவைக்காக கொடுப்பனவெதுவும் செய்யப்படுதலாகாது.

(2) ஓராம் உபஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட நட்டஈடானது ஒன்பது இலட்சம் ரூபா எனும் குறைந்தபட்ச வரம்பெல்லைக்கும் ஐந்து மில்லியன் ரூபா எனும் அதிகபட்ச வரம்பெல்லைக்கும் அமைவாகச் செலுத்தப்படுதல் வேண்டும்.

5. ஒப்பந்தஞ்சார் உடன்படிக்கைகளின்கீழ் சேவையாற்றுகின்ற ஊழியர்கள் புறநீங்கலாக, இலங்கை மின்சார சபையின் நிரந்தர ஊழியர்கோப்பின்கீழ் சேவையாற்றும் ஊழியர்களாக வகுதிப்படுத்தப்படாத ஊழியர்களுக்கு செலுத்தப்படற்பாலதான நட்டஈடு பின்வருமாறாக இருத்தல் வேண்டும்:-

(அ) கடந்தகால சேவைக்காக ஒவ்வொரு பன்னிரெண்டு மாதங்களுக்கும் 2.0 மாதங்களுக்கான சம்பளம்;

(ஆ) குறைந்தபட்ச நட்டஈடு பன்னிரெண்டு மாதங்களுக்கான சம்பளமாக இருத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) நட்டஈட்டைக் கணக்கீடுசெய்யும் முறைமை (22 X தினசரி வேதனம் X மாதங்களின் எண்ணிக்கை).

6. ஒழுங்குவிதி 4 இன்கீழ் அல்லது ஒழுங்குவிதி 5 இன்கீழ் செலுத்தப்படற்பாலதான நட்டஈடு, இடைக்கால மற்றும் வேறு படிகள் புறநீங்கலாக, இளைப்பாறுகையின் போது சகாய நிதியத்திற்கான தொகையைக் கணிப்பிடுவதில் கவனத்திற்கெடுத்துக்கொள்ளப்படும் மாதந்தச் சம்பளத்தின் அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.

7. நட்டஈட்டுக்கு மேலதிகமாக, எல்லா நியதிச்சட்டக் கொடுப்பனவுகளும் இயைபான சட்டங்களின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி செய்யப்படுதல் வேண்டும்.

8. ஒழுக்காற்று விசாரணைகளுக்கமைந்துள்ள ஊழியர்கள் அல்லது எந்த ஊழியர்களின் அந்தஸ்து ஏதேனும் நியாயசபையில் கேள்விக்குட்படுத்தப்பட்ட நிலையிலுள்ளதோ அந்த ஊழியர்கள் இவ்வொழுங்குவிதிகளின்கீழான தன்னார்வ இளைப்பாறுகைக்காக விண்ணப்பிக்கத் தகவுடையவராதலாகாது.

9. அந்தந்த ஊழியர்களிடமிருந்து வருமதியாகவுள்ள எல்லா நிலுவைகளும் 4 ஆம் அல்லது 5 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் செலுத்தப்படற்பாலதான நட்டஈட்டிலிருந்து அறவிடப்படுதல் வேண்டும்.

10. தன்னார்வ இளைப்பாறுகைத் திட்டத்தின்கீழ் தன்னார்வ அடிப்படையில் இளைப்பாறுகின்றவராகவும் இவ்வொழுங்குவிதிகளின்கீழ் குறித்துரைக்கப்பட்ட நட்டஈடு செலுத்தப்படற்பாலவராகவுமுள்ள எவரேனும் ஊழியர், எந்தவொரு சூழ்நிலையிலும் ஏதேனும் அடுத்துறும் கம்பெனியில் தொழிலுக்கமர்த்தப்படுதலாகாது.

## அட்டவணை

(ஒழுங்குவிதி 3)

### தன்னார்வ இளைப்பாறுகைத் திட்டத்திற்கான விண்ணப்பப் படிவம்

ஊழியரினால் நிரப்பப்பட வேண்டும்.

1. ஊழியரின் பெயர்:-
2. தேஅஅ இல. :-
3. சகாய நிதிய இல. :-
4. பதவி
5. பிறந்த திகதி:-
6. இலங்கை மின்சார சபையில் இணைந்த திகதி (தற்காலிக காலப்பகுதி ஏதேனுமிருப்பின் அது நீங்கலாக):-
7. இலங்கை மின்சார சபையில் சேவையைப் பூர்த்திசெய்துள்ள ஆண்டுகளின் எண்ணிக்கை:-
8. விருப்பத்தெரிவுடன் இளைப்பாறும் திகதி:-
9. நான் இத்தால் பின்வருமாறு சான்றுப்படுத்துகின்றேன்:-

(அ) மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் முழுமையானவையும் உண்மையானவையும் ஆகும்.

(ஆ) என்னால் செலுத்தப்படற்பாலனவான எத்தன்மையினதுமான எல்லா கடன்கள் /வருமதிகள் முதலியனவற்றை அறவிடுவதற்கும் சரிக்கட்டுவதற்கும் நான் இத்தால் ................ இற்கு (உருவகத்தின் பெயர்) அதிகாரமளிக்கின்றேன்.

(இ) மேலே சொல்லப்பட்ட ஏதேனும் கூற்று உண்மையல்லவென்று கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் ............... இனால் (உருவகத்தின் பெயர்) எனக்குச் செய்யப்பட்ட கொடுப்பனவானது ............ இனால் (உருவகத்தின் பெயர்) எனக்கெதிராக எடுக்கப்படக்கூடியவாறான ஏதேனும் நடவடிக்கைக்குப் பங்கமின்றி என்னிடமிருந்து அறவிடப்படற்பாலதாதல் வேண்டும் என நான் உடன்படுகின்றேன்.

(ஈ) நான், 2025 ஆம் ஆண்டின் இலங்கை மின்சார (தன்னார்வ இளைப்பாறுகைத் திட்டத்தின் நியதிநிபந்தனைகள்) ஒழுங்குவிதிகளில் விதித்துரைக்கப்பட்ட நியதிநிபந்தனைகளுக்கிணங்க ....................... இன் (உருவகத்தின் பெயர்) சேவையிலிருந்து தன்னார்வத்துடன் இளைப்பாறுவதற்கு உடன்படுகின்றேன்.

திகதி: ..........................................

விண்ணப்பகாரரின் கையொப்பம்